* **பாடம் - 3**

## ஐரோப்பிய மறுமலர்ச்சி

மறுமலர்ச்சி என்பது மீண்டும் மலர்தல் எனும் கருத்துடைய சொல்லாகும். 14ஆம் நூற்றாண்டு தொடக்கம் 16ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பியாவில் கலை, விஞ்ஞானத் துறையில் ஏற்பட்ட மாற்றங்களை அறிமுகஞ் செய்வதற்கு வரலாற்று ஆய்வாளர்கள் மறுமலர்ச்சி என்ற சொல்லை பயன்படுத்துகின்றனர்.

மத்தி காலத்தின் இறுதியில் ஐரோப்பியரிடையே பண்டைய கிரேக்க உரோம நாகரிகம் தொடர்பாக அதிக ஆர்வம் ஏற்படலாயிற்று. எனவே கிரேக்க, உரோம நாகரிகம் தொடர்பாக நூல்களை கற்றல், அந்நாகரிகங்களுடன் தொடர்புடைய கிரேக்க இலத்தீன் மொழிகளைக் கற்றல் என்பவற்றில் ஐரோப்பியர் ஈடுபட்டனர்.

* **மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்கள் :-**

கொன்ஸ்தாந்திநோபிள் நகர் துருக்கியரால் கைப்பற்றப்படல்

கி.பி. 1453 ஆம் ஆண்டு இஸ்லாமியரான துருக்கியர் கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றியதால் ஐரோப்பிய வர்த்தகம் பெரும் சவாலை எதிர்நோக்கியது.

(i) கொன்ஸ்தாந்திநோபிள் கைப்பற்றப்பட்ட பின்னர் ஐரோப்பிய வர்த்தகம் ஐரோப்பிய வர்த்தகர்களால் தொடர்ந்தும் அதனை வர்த்தக மத்திய நிலையமாக பயன்படுத்த முடியாது போனது. ஆதலால், அங்கிருந்த அறிஞர்கள் கொன்ஸ்தாந்திநோபிள் வாய்ந்த கிரேக்க, உரோம நூல்களை எடுத்துக்கொண்டு தமது நாடுகளுக்குச் சென்றனர்.

(ii) செல்வந்த வர்க்கம் தோற்றம் பெறுதலும்.

(iii) கல்வி மறுமலர்ச்சி :-
உரோம நாகரிகம் வீழ்ச்சியுற்ற பின்னர் நிலவிய காலப்பகுதியில் திருச்சபையையும் குருமாரையும் மையமாகக் கொண்ட கல்வி முறை நிலவியது. இறையியல், மெய்யியல், சட்டம் போன்ற சில பாடங்களே அங்கு கற்பிக்கப்பட்டன.

| நாடு | பல்கலைக்கழகம் |
|---|---|
| இத்தாலி | பொலஞ்ஞோ, பாதுவா |
| பிரான்ஸ் | பரிஸ் |
| இங்கிலாந்து | ஒக்ஸ்போட், கேம்பிரிஜ் |

புதிய கல்விமான்கள் தோற்றம்பெறல் :-

| நூல் ஆசிரியர் | நாடு |
|---|---|
| தாந்தோ | இத்தாலி |
| வில்லியம் ஷேக்ஸ்பியர் | இங்கிலாந்து |
| இராமஸ் | பிரான்சு |

(iv) மானிடவாதம் எழுச்சிபெறல்:-

மனிதனை விட கடவுளை மேலானவர் என்ற எண்ணக்கரு நிலவியது. மறுமலர்ச்சிக் காலத்தில் மனிதனின் நடவடிக்கை மனிதனை மேலானவற்று

மறுமலர்ச்சிக்கு முற்பட்ட கால கலைப்பண்புகள் பாட நூலில் பக்கம் 53 இல் உள்ளது. பார்க்கவும்.

(v) சித்திரக்கலை :-

மேனாலிசா, இறுதி இராப்போசனம் - லியானோடோ டாவின்சி
மைக்கல் அஞ்சலோ சிறந்த ஓவியர். சிறந்த கட்டடக்கலையிலும் சிறந்து விளங்கியவர்.